## ஒதுக்கீட்டு தலைப்பு - 269 -- மாவட்ட செயலகம், மட்டக்களப்பு

## மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 1. மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

i வறுமைக் குறைப்பு முயற்சிகளை வழங்குதலும் முகாமைத்துவம் செய்ததும்.

ii இடர் நிவாரண மற்றும் புனரமைப்புச் செயற்திட்டங்களின் நிர்வாகம்

iii அபிவிருத்தி செயற்திட்டங்களைத் திட்டமிடலும், மேற்பார்வை செய்தலும்

iv தேர்தல்களை ஒருங்கிணைத்தல்

v மாவட்ட செயற்திட்ட நிர்வாகமும் பணிப்புக்களும்

vi ஓய்வூதிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

vii பிறப்புக்களையும் இறப்புக்களையும் பதிவுசெய்தல்.

viii தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்

ix காணிகள் தொடர்பான வேலைகள்

x வருமானச் சேகரிப்பு

### 2.0 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

i கோரளைப்பற்று வடக்கு

ii கோரளைப்பற்று மேற்கு

iii கொரளைப்பற்று மத்தி

iv கொரளைப்பற்று

v கொரளைப்பற்று தெற்கு

vi ஏறாவூர்பற்று

vii ஏறாவூர் நகரம்

viii மன்முனை வடக்கு

ix காத்தான்குடி

x மன்முனைப்பற்று

xi மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று

xii போரதீவூப்பற்று

xiii மன்முனை தென்மேற்கு

xiv மன்முனை மேற்கு

## 3. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 4. கணக்குகள்

### 4.1 மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் செயற்படுகின்ற 14 பிரதேச செயலகங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 296,350,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 277,004,932 பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் தேறிய சேமிப்பு ரூபா 19,345,068 அல்லது 6.53 சதவீதமாக இருந்தது.

| செலவினத்தின் தன்மை | மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவரும் | 260,200,000 | 260,200,000 | 254,852,319 | 5,347,681 | 2.05 |
| மூலதனம் | 36,150,000 | 36,150,000 | 22,152,613 | 13,997,387 | 38.72 |
| மொத்தம் | 296,350,000 | 296,350,000 | 277,004,932 | 19,345,068 | 6.53 |

| | | | | |
|---|---|---|---|---|
| 174 | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மீளமைப்பு அமைச்சு | 1,998,250 | 1,998,250 | - |
| 204 | இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 330,000 | 330,000 | - |
| 206 | கலாசார அலுவல்கள் அமைச்சு | 4,000 | 4,000 | |
| 210 | அரசாங்க தகவல் திணைக்களம் | 8,000 | 8,000 | |
| 216 | சமூக சேவைகள் திணைக்களம் | 935,380 | 931,192 | 4,187 |
| 217 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 1,754,538 | 1,642,235 | 112,302 |
| 218 | சமூர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 322,468,703 | 318,809,774 | 3,658,928 |
| 219 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | 15,446,994 | 15,127,261 | 319,733 |
| 226 | குடிவரவு மற்றும் குடியகள்வுத் திணைக்களம் | 19,305 | 19,305 | - |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் | 155,446 | 155,444 | 2 |
| 236 | அரசகருமமொழிகள் திணைக்களம் | 1,682,232 | 1,627,117 | 55,115 |
| 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 230,530 | 219,011 | 11,519 |
| 240 | தேசிய பாதீட்டுத் திணைக்களம் | 47,000 | 46,782 | 218 |
| 252 | தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் | 608,315 | 605,065 | 3,250 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 267,448,630 | 246,950,278 | 20,493,128 |
| 307 | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | 6,155,785 | 5,808,242 | 347,543 |
| | மொத்தம் | 922,863,510 | 876,809,449 | 46,054,061 |

## 4.3 கணக்காய்வும் கணக்காய்வின் நோக்கெல்லையும்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு

பிரேரணையொன்று மாவட்டச் செயலகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) நிலையான சொத்துக்களாக கருதமுடியாத ரூபா 47,013 தொகையான 70 கண்ணாடி அட்டைகளின் பெறுமதி மூலதன ஏற்பாடுகளின் கீழ் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பொது வைப்புக் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 10,008,446 ஆனதுடன் அவற்றின் மீதான காலப்பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| **1 ஆண்டினை விடக் குறைவு** | **1 ஆண்டிற்கு மேல் 02 ஆண்டுகளிற்கு குறைவு** | **2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|---|
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 5,406,608 | 4,601,838 | 10,008,446 |

**(இ) முற்பணக் கணக்குகள்**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்களைக் கணக்கு**

(i) நிலுவையாகவிருக்கின்ற கடன் மீதிகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற மீதிகள் ரூபா 4,298,176 ஆனதுடன் நிலுவையாகவிருக்கின்றதற்கான காரணங்கள் மற்றும் நிலுவையாகவிருக்கின்ற காலப்பகுதி என்பற்றின் குறிப்பு கீழே தரப்படுகின்றன.

மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் என்பவற்றின்படி உரிய பிரதேச செயலாளர்கள் அந்த விடுதிகளில் வசித்திருக்கவில்லை. 3 முதல் 5 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாக அந்த உத்தியோகபூர்வ விடுதிகள் பயனற்றிருந்தன. இந்த விடயம் முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையிலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

## 4.8 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்ட செயலகம் மற்றும் ஆறு பிரதேச செயலகங்களிற்கிடையில் மேற்கொண்ட குறித்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான பல சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) கொள்வனவு வழிகாட்டிகோவையில் முன்வைக்கப்பட்ட நடைமுறைகளை மீறல்

#### (i) மட்டக்களப்பு மாவட்டச் செயலகம்

(அ) கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு கூட்டங்களில் பங்குபற்றுவதற்கான உறுப்பினர் படிகளாக ரூபா 70,250 கூட்டுமொத்தத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கூட்டங்கள் அலுவலக நேரங்கள் அல்லாத நேரங்களில் நடைபெற்றதாக 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்களின் கைநூலின் 2.9.1 மற்றும் 2.9.2 ஆம் பிரிவுகள் மற்றும் அதன்பின்னர் 2007 யூன் 28 ஆந் திகதிய 10 ஆம் இலக்க குறிநிரப்புத் திருத்தம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக இக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் உறுப்பினர்கள் குறைந்தது இரண்டு கூட்டங்களில் பங்குபற்றியதற்கான சான்றுகள் இருக்கவில்லை.

(ஆ) முன்னங்கீகாரம் பெறாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 5,486,617 பெறுமதியான ஐம்பத்தொரு நிலையான சொத்து விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

மற்றும் வழங்கல்களைப் பதிவதற்காக முறையான இருப்புப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ii) பிரதேச செயலகம், மன்முனைவடக்கு**

(அ) 2010சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்திற்கான பிரதேச செயலாளரின் தின்க குறிப்பு பொழிப்புகள் மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணையின்படி, கமநெகும மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வேலைகளின் மேற்பார்வைக்கான உள்ளபடியான செயலாற்றல் 1,252 கிலோமீற்றர்களாகும். ஆகவே 2010.06.09 ஆந் திகதிய பீரி/டிபிஎஸ்/ஜீஎன்/ஏஎல்எல்ஓ/2010 ஆம் இலக்க மாவட்ட திட்டமில் செயலகத்தின் கடிதத்தின்படி 156.5 லீற்றரிற்கான ரூபா 11,503 தொகை மீளளிப்புச்செய்திருக்கலாம். எவ்வாறாயினும், 3,326 கிலோமீற்றர் செயலாற்றலிற்காக 361.34 லீற்றர் எரிபொருளிற்கு ரூபா 26,608 மீளளிப்பு செய்யப்பட்டதால் ரூபா 15,105 தொகை மேலதிக கொடுப்பனவாக இருந்தது.

(ஆ) 2010 சனவரி முதல் மே வரையான காலத்திற்காக மோட்டார் வாகனங்களின் எரிபொருள் மற்றும் ஏனைய பராமரிப்புக்களில் ரூபா 192,391 ஆன செலவினம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இக்காலத்திற்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. ஆகவே இச்செலவினை காணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

**(iii) கொரளைப்பற்று மேற்கு பிரதேச செயலகம்**

செயலகப் பிரிவிற்கு வெளியே பயணம் செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட மேலதிக எரிபொருளுக்காக ரூபா 5,578 தொகையினால் எரிபொருள் செலவின மீளளிப்பைப் பெறுவதற்கு மாவட்டச் செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, மேலதிக எரிபொருளிற்கான கொடுப்பனவுகளை பிரதேச செயலாளர் பெற்றிருந்தார். எவ்வாறாயினும், இம் மீளளிப்பிற்காக

அவர் எந்த விலைப் பட்டியலையும் சமர்ப்பித்திருக்காததுடன் பயன்படுத்தியதற்கான சான்றாக நாளாந்த ஓட்ட அட்டவணையில் பெறப்பட்ட மேலதிக எரிபொருள் அளவை பதிந்திருக்கவில்லை. இந்த மீளளிப்புகள் மேலதிகப் படியாகக் கருதப்பட்டிருந்தன. இது வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு முரணாக உள்ளது.

**(iv) மண்முனைப்பற்று பிரதேச செயலகம்**

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் வலுவூட்டல் அமைச்சின் 2008.12.22 ஆந் திகதிய 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களில் வேண்டப்பட்டவாறு சிறுவர்களிற்கான ஒரு கிளாஸ் பால் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பால் விநியோகித்தல் தொடர்பில் வழங்குநர்களிற்கும் பிரதேச செயலாளருக்கும் இடையில் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருக்கவில்லை. 2010 ஒக்டோபர் 12 மற்றும் 13 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளில் 8 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஒரு சிறுவரிற்கு 4 நாட்களிற்கு ஒரு லீற்றர் என்ற வீதத்தில் விநியோகிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. ஆதலால், 2010 சனவரியிலிருந்து யூலை வரை 3,421 சிறுவர்களிற்கு 13,641 லீற்றர் பால் விநியோகிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், 17,105 லீற்றர்களிற்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தமையால் வழங்குனரிற்கு ரூபா 171,050 தொகையான மேலதிகக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பிரதேச செயலகம் இந்த மேலதிகக் கொடுப்பனவில் ரூபா 31,900 தொகையினை மாத்திரமே அறவிட்டிருந்தது.

**4.9 மோசடியான கொடுக்கல் வாங்கல்கள்**

**பிரதேச செயலகம் மண்முனைப்பற்று**

கமநெகும வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலனாளிகளிற்கு வழங்கப்பட்ட முப்பத்தொன்பது சதவீதமான கோழிக் குஞ்சுகள் நாட்டுக் கோழிக்குஞ்சுகளிற்குப் பதிலாக பாம் கோழிக் குஞ்சுகளாக இருந்தன. இதன்படி, இவ்வாறாக 429 பாம் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. 429 பாம் கோழிக் குஞ்சுகளிற்கு

செய்யப்பட்ட மோசடியான கொடுப்பனவு ரூபா 55,770 ஆகும். உரிய நலன்களை நலனாளிகளும் பெற்றிருக்கவில்லை.

## 4.10 மோட்டார் வாகனப் பாவனை

### (i) மட்டக்களப்பு மாவட்டச் செயலகம்

மாவட்டச் செயலகம் குறித்த சில மோட்டார் வாகனங்களின் அசைவினைக் கட்டுப்படுத்தி மேற்பார்வை செய்வதற்காக பதிவேடு பேணியிருக்கவில்லை. அந்த மோட்டார் வாகனங்களின் மாதாந்த செயலாற்றல் பொழிப்புகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. 2010 சனவரி முதல் மே மாதம் வரை ஒதுக்கப்பட்ட வாகனங்கள் நாளாந்த ஓட்ட அட்டணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, 3 உத்தியோகத்தர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 127,449 தொகையான எரிபொருள் படியினையும் மோட்டார் வாகனங்களில் ஏற்பட்ட ரூபா 35,427 தொகையான மேலதிக எரிபொருள் செலவுகளையும் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### (ii) பிரதேச செயலகம் கொரளைப்பற்று மத்தி

251- 3557 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணையில் ரூபா 7,890 கிரயத்திலான 107.50 லீற்றர் எரிபொருள் கொள்வனவு பதியப்பட்டிருக்கவில்லை.

## 4.11 மனிதவளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.